புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

===============================================================

# கோசலை நாவல் வெளிப்படுத்தும் அரசியல் நிலைப்பாடு

===============================================================

**முனைவர் த. திருப்பதி**
**உதவிப்பேராசிரியர்**
**தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை (சுழற்சி 2)**
**தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)**
**திருப்பத்தூர் – 635601**

**ஆய்வுச்சுருக்கம்**

கோசலை நாவல் தமிழ்ப்பிரபா எனும் எழுத்தாளரால் எழுதப்பட்டு 2022 ஆம் ஆண்டு நீலம் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நாவல் இரண்டுவிதமான அரசியல்களைப் பற்றிய குறிப்புகளைத் தன்னுள் கொண்டுள்ளது. ஒன்று பொதுவுடைமை அரசியல் மற்றொன்று அம்பேத்கரிய அரசியல். பொதுவுடைமை அரசியல் பேசுவோர் சாதிய மனநிலையைக் கொண்டவர்களாக உள்ளனர் எனும் விமர்சனநிலையிலும், அம்பேத்கரியம் ஏற்புநிலையிலுமாகப் பேசப்பட்டுள்ளன. கோசலை என்கிற மையக் கதாபாத்திரத்தின் வழியாக அம்பேத்கரிய அரசியலை இந்நாவல் முதன்மைப்படுத்துகிறது. நாவல் உருவாக்கப்பட்டதன் பின்னணியேகூட அம்பேத்கரியத்தை முதன்மைப்படுத்துவதற்காகத்தான் எனும் நிலையையும் காணமுடிகிறது. இவ்வாறு இந்நாவல் வெளிப்படுத்தும் அரசியல் நிலைப்பாடுகளைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**அம்பேத்கரியம் – பொதுவுடைமை அரசியல்**

பொதுவுடைமை அரசியல் என்பது ஜெர்மன் தத்துவஞானத்திலிருந்து தோன்றி கார்ல் மார்க்சால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு தத்துவார்த்த அரசியல். வர்க்க அரசியலை அது தனது முதன்மையான கோட்பாடாகக் கொண்டுள்ளது. வர்க்கத்தை ஒழிப்பது அதனது முதன்மையான நோக்கம்.

அம்பேத்கரியம் என்பது அம்பேத்கரின் சிந்தனைகளால் உருவானது. அவர் இந்தியாவின் முதன்மையான முரண்பாடாகச் சாதியைக் குறிப்பிடுகிறார். சாதியின் தோற்றத்திற்கான காரணங்களையும் அவற்றை ஒழிப்பது குறித்த தனது பார்வைகளையும் அவர் முன்வைத்துள்ளார். அவரது இந்தியாவில் சாதிகள் (2015) மற்றும் சாதியை அழித்தொழித்தல் (2021) என்கிற இரு ஆய்வுகள் முக்கிய ஆவணங்களாகப் பார்க்கப்படுகின்றன. அந்த ஆவணங்கள் இந்தியா ஏனைய நாடுகளைப்போன்று வர்க்கமாக மட்டுமல்லாமல், சாதிகளாகவும் பிரிந்திருப்பதையும், விடுதலைக்கும் பொதுவுடைமையின் பாதைக்கும் அதுவே தடையாக உள்ளதையும் எடுத்துக்காட்டுகின்றன. சாதியை ஒழிப்பதுதான் முதன்மையான பணி என்பது அம்பேத்கரிய முடிவு.

சாதி, வர்க்கம் எது முதன்மை என்பதில் பொதுவுடைமை மற்றும் அம்பேத்கரிய இயக்கங்கள் தங்களுக்குள் மிக நீண்ட காலமாக விவாதித்து வருகின்றன. ஏராளமான விவாதங்கள் இவற்றை ஒட்டி நடந்துள்ளன. அது அம்பேத்கர் துவக்கமாக (2021) மார்க்சிய நிலைப்பட்ட விவாதங்கள் (பி. சம்பத், 2022., கொற்றவை, 2023) அம்பேத்கரியத்தையும் மார்க்சியத்தையும் விமர்சன வழியில் அணுகும் ஆனந்த் டெல்டும்டே (2019) உள்ளிட்ட ஆய்வாளர்களின் வாதங்கள் எனப் பரந்துப்பட்டதாக உள்ளன. அத்தகையதொரு விவாதங்களின் ஒரு பகுதியாகக் கோசலை நாவலும் தன்னை இணைத்துக்கொள்வதாக அதன் கட்டமைப்பு அமைந்துள்ளது.

**கோசலையின் பாத்திர அமைப்பு**

கோசலை சாதியால் ஒடுக்கப்பட்டவராகக் காட்சிப்படுத்தப்படவில்லை. அவர் ஓர் இடைநிலைச் சாதியில் பிறந்தவராகக் கட்டமைக்கப்பட்டுள்ளார். எனினும் தனது உடலால் ஒடுக்கப்பட்டவராக உள்ளார். உயரம் குறைவானவராகப் பதினாறு வயதில் ஐந்து வயது குழந்தையின் தோற்றத்தில் அவர் உள்ளார் (தமிழ்ப்பிரபா, 2023: ப. 12). மூனடி உயரம், தலைக்கும் தோளுக்கும் நடுவே கழுத்துப்பகுதியே இல்லாது, வளைந்த முதுகில் கொஞ்சம் கூன் வேறு சுமந்து வாழ்கிறார் (2023: ப.29). அதனால் கோசலை எனும் பாத்திரம் சிறுவயது முதல் பல்வேறு புறக்கணிப்புகளையும் அவமானங்களையும் சந்தித்துப் பின்னர் அம்பேத்கரை வாசித்ததன் வழியாகப் புறக்கணிப்புகளில் இருந்து மீண்டெழும் பாத்திரமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**கோசலையின் தந்தை அலங்காரவேலனும் பொதுவுடைமை அரசியலும்**

கோசலை பாத்திரத்தின் தந்தையான அலங்காரவேலன் ஒரு கம்யூனிஸ்ட்டாக அடையாளம் காட்டப்படுகிறார் (தமிழ்ப்பிரபா, 2023: ப.19). தொழிலாளர்கள் வர்க்கத்திற்காக அவர் தனது குடும்பத்தையும் கண்டுகொள்ளாதவராக உள்ளார். கல்குவாரித் தொழிலாளர்களின் பல்வேறு உரிமைகளை மீட்க நடந்த போராட்டத்தின்போது தொழிலாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். அவர்களைப் பிணையில் எடுப்பதற்காக மனைவியின் தாலியை அடகு வைக்கிறார் (2023: ப.25). இவ்வாறு அப்பழுக்கற்றுத் தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் கட்சிக்காகவும் கடுமையாக உழைக்கும் பாத்திரமாக நாவலின் தொடக்கத்தில் அவர் காட்சிப்படுத்தப்படுகிறார். பின்னர் ஒரு நல்ல தலைவராக இருந்தாலும், அவர் மனதில் சாதியம் ஆழமாகப் படிந்திருப்பதைக் கோசலையின் காதல் நிகழ்வில் அவர் வெளிப்படுத்துவதாக அவரின்

பாத்திரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவர் மனதில் இருக்கும் சாதியம் அவரது சொந்த மகளிடம் இருந்து அவரை அந்நியப்படுத்தி அவர்களின் உறவு முறிவதற்குக் காரணமாக இருப்பதையும் நாவல் வெளிப்படுத்துகிறது.

**கோசலையின் காதலும் அலங்காரவேலனின் மறுப்பும்: சாதியமும்**

கோசலையின் உடற்குறைபாட்டினால் அவர் திருமணமாகாத முதிர்க்கன்னியாக உள்ளார். அலங்காரவேலனாலும் தம் மகளுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை ஏற்படுத்தித்தர இயலவில்லை. இந்நிலையில் கோசலையின் வீட்டருகே கேரம் விளையாட வருகின்ற ஜோதி என்கிற நபரினால் தான் பார்க்கப்படுவதை உணர்கிறார் கோசலை. பின்னர் தனது தோற்றத்தில் இருப்பவர்களை யாரும் விரும்பமாட்டார்கள் எனக் கருதுகிறார். ஆனால் ஜோதியோ கோசலையைக் காதலிக்க ஆரம்பிக்கிறார். அதனைக் கோசலையிடமும் வெளிப்படுத்துகிறார். பல்வேறு மனக்குழப்பங்களுக்கிடையில் ஜோதியின் காதலை ஏற்கிறார் கோசலை. வீட்டில் இதனைப்பற்றிப் பேசி திருமணத்திற்குச் சம்மதம் வாங்க நினைக்கிறார் கோசலை. தனது அப்பாவும் தம்பியும் அதனை ஏற்பார்கள் என்று கருதுகிறார். ஆனால் அதனைக் கோசலையின் தந்தையான அலங்காரவேலன் முற்றிலுமாக ஏற்கவில்லை (2023: ப.54). பின்னர் தனது அத்தை மகள்கள், தம்பி கணேசன், சித்தி இவர்களின் மூலமாகப் பேசிப்பார்த்தும் அலங்காரவேலன் அதனை ஏற்கவில்லை. மற்றவர்களும் அதனை முழுமனதாக ஏற்கவில்லை. தங்களது குடும்பத்தினரால் கோசலைக்குத் திருமணம் செய்துவைக்க முடியாவிட்டாலும்கூட அவளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் வேறொரு சாதியினராக இருப்பது மட்டுமே எதிர்ப்பிற்குக் காரணமாக நாவலில் முன்வைக்கப்படுகிறது. இவற்றையெலாம் எதிர்த்து கோசலை ஜோதியைத் திருமணம் செய்து கொள்கின்றார் (2023: ப.64). அதற்குப்பிறகு கோசலையின் வீட்டார் யாரும் அவரிடம் பேசுவதும், பார்ப்பதுமில்லை. கோசலைக்குக் குழந்தை பிறந்தபோதும் சரி, பின்னர் கோசலையை அவரது கணவன் பிரிந்தபோதும் சரி, கோசலையின் பெண் இறந்தபோதும் சரி அலங்காரவேலன் குடும்பத்தினர் அவரைச் சென்று சந்திக்கவோ பேசவோ இல்லை. இவை அவர்களின் சாதிய உணர்வின் கடுமைக்கான சான்றுகளாக நாவலில் கட்டமைக்கப்பட்டுள்ளன. பின்னாட்களில் மரணத்தருவாயில் அலங்காரவேலன் இது குறித்து யோசிக்கிறார். 'சமத்துவத்தின் பாதையில் பயணித்த தன் மனதில் சாதிய உணர்வு எப்படி உண்டானது? இதற்குத் தான்தான் காரணமா? தனது கட்சி இது குறித்துப் பயிற்றுவிக்கவில்லையா? பொருள்முதல்வாதியாக இருந்தும் சாதியெனும் கருத்தியலுக்கு தான் ஆட்பட்டது எவ்வாறு என்றெல்லாம் யோசித்துப்பார்க்கிறார்' (2023: பக். 196 -198). சமத்துவத்தின் பாதையில் இருந்தாலும் இடைநிலைச் சாதிகளால் தங்களின் சாதியமனநிலையை ஒழித்துக்கொள்ள முடிவதில்லை (2023: 198) என்கிற முடிவினை நாவல் கொண்டுள்ளது. பொதுவுடைமைவாதிகளின்மேலும் அந்த அரசியலின்மேலும் அம்பேத்கரியம் வைக்கின்ற வர்க்கப்பார்வை உடையவர்களுக்குச் சாதியப்பார்வை இல்லை என்கிற விமர்சனத்தை இந்த நாவலும் அலங்காரவேலன் பாத்திரத்தின் மூலம் முன்வைப்பது நாவலின் அரசியல் நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ள உதவுகிறது

**அம்பேத்கரியமும் கோசலையின் வாழ்வில் ஏற்பட்ட விடுதலையும்**

தனது உடலமைப்பால் ஏற்பட்ட அவமானங்கள். காதலால் பிரிந்த குடும்பம். காதலித்துத் திருமணம் செய்துகொண்ட கணவன் அவரைப் பிரிந்துசென்று அவனது தாயின் ஆலோசனையின்படி வேறொரு திருமணம் செய்துகொண்டது. அவரது மகளின் இறப்பு என எல்லாவகையான துன்பத்தையும் கோசலை அனுபவிக்கின்றார். அவர் வாழ்வதே மிகுந்த வேதனைக்குறியதாக மாறிவந்த நிலையில் சமையல் வேலைக்காகப் பொது நூலக இயக்குநராக இருக்கும் சாம்பவமூர்த்தி என்பவரின் வீட்டிற்குச் செல்கிறார்

கோசலை (2023: ப.131). கோசலைக்கு அவளது சித்தியின் மூலம் முன்னரே வாசிப்புப் பழக்கம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அவையாவும் இரமணிச்சந்திரன் உள்ளிட்டவர்களின் நாவல்களாக இருந்தன. அம்பேத்கரியவாதியான சாம்பவமூர்த்தியால் 'விசாவுக்காகக் காத்திருக்கிறேன்' நூல் வழியாக அம்பேத்கரைப் படிக்கிறார் கோசலை. பின்னர் அந்நூல் குறித்து சாம்பவமூர்த்தியுடன் நடந்த உரையாடல்கள் (2023: பக்.143 - 147) அவருக்குப் புதிய பாதைகளை உருவாக்கித் தருகின்றன. அந்நூல் அம்பேத்கர் சிறுவயது முதல் சாதியின் பெயரால் அனுபவித்த நிகழ்வுகளின் தொகுப்பாகவும் அவை சமூகத்தின்மீதான வெறுப்பிற்குப் பதிலாக அதன் மாற்றங்களுக்கான அவரது பாதைக்கு எவ்வாறு வித்திட்டது என்பதையும் விளக்குகிறது (பூ. கொ. சரவணன், 2024). இந்நூல் சமூகம் தனிநபர்மேல் செலுத்தும் வன்மங்களை எதிர்த்து வாழ்வது எப்படி என்கிற வழிகாட்டுதலைக் கோசலைக்கு வழங்குகிறது. முப்பத்தியேழு வயதில் கோசலையின் வாழ்வு புதிய பாதைகளை உள்வாங்கி அவரது வாழ்க்கை பெரும் மாற்றங்களைச் சந்திக்கிறது. சாம்பவமூர்த்தியின் உதவியுடன் பதிவு எழுத்தராகவும் (2023: 148) பின்னர் முயன்று படித்துத் தேர்வெழுதி தனது சொந்த ஊரான சிந்தாதிரிப்பேட்டை மாவட்டக் கிளை நூலகத்தின் நூலகராகவும் ஆகிறார் (2023: 159) கோசலை. நூலகத்தில் வாசகர்களை அதிகரிக்க பெரும் முயற்சிகளை எடுக்கிறார். ஏழை மாணவர்களுக்கு மாலை வகுப்பு எடுக்க ஏற்பாடு செய்கிறார். தனது வாழ்க்கையைத் தனது ஊரைச் சுற்றியுள்ள ஒடுக்கப்பட்ட மற்றும் ஏழை மக்களின் வாழ்வியலுக்காகப் பயன்படுத்துகிறார். இத்தகைய வாழ்வினால் அவரது இறுதி ஊர்வலத்தில் ஊர் மக்கள் பலரும் திரண்டு அவருக்கு அஞ்சலிச் செலுத்துகின்றனர். பின்னர் அவருக்கு அங்குச் சிலை நிறுவுகின்றனர் (2023: பக். 221 – 223). வாழ்வில் ஒடுக்கப்பட்டுப் பல்வேறு வலிகளைச் சுமந்த கோசலை அம்பேத்கரின் வழியாக வெற்றி வாழ்க்கையை வாழ்ந்து மறைவதாக நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது. இவற்றின் வழியாக அம்பேத்கரியமே ஒடுக்கப்பட்டவர்களுக்கான விடுதலை பாதை என்பதைத் தனது மையமான அரசியல் நிலைப்பாடாக இந்நாவல் வெளிப்படுத்துவதை அறியமுடிகிறது.

**தொகுப்புரை**

- ❖ கோசலை நாவல் பொதுவுடைமை அரசியல் மற்றும் அம்பேத்கரிய அரசியல் எனும் இரண்டு விதமான அரசியல் நிலைப்பாடுகள் பற்றிப் பேசுகிறது.
- ❖ கோசலையின் தந்தை அலாங்காரவேலன் எனும் பாத்திரத்தின் வழியாகப் பொதுவுடைமை அரசியல் மற்றும் அதன் மீதான சாதிப்பற்றிய பார்வையின்மை, சாதிய ஆதிக்கம் உள்ளிட்டவற்றை வெளிப்படுத்தி அதன்மீது விமர்சனத்தை முன் வைக்கிறது.
- ❖ நூலக இயக்குநர் சாம்பவமூர்த்தி வழியாக அம்பேத்கரிய அரசியல் கோசலைக்கு அறிமுகமாகி அவரது வாழ்விற்கு வழிகாட்டியாக அம்பேத்கர் ஏற்க வைக்கப்படுகிறார்.
- ❖ கோசலையின் வாழ்வுப் பொதுவுடைமைவாதியான தந்தையாலும், கணவனின் பிரிவு, குழந்தையின் இறப்பு, உறவினர்களின் புறக்கணிப்பு என யாவற்றாலும் மறுக்கப்படுகிறது. வெறுப்பின் விளிம்பில் இருந்த கோசலையின் வாழ்வு அம்பேத்கரியத்தால் மீண்டு வெற்றியுடைய வாழ்வாக மாறியிருப்பதாக நாவல் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- ❖ நீண்ட கால விவாதத்தின் ஒருபகுதியாக அம்பேத்கரியமே ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்கு ஏற்ற அரசியல் நிலைப்பாடு என்பதனை நாவல் வெளிப்படையாகவே முன்வைக்கிறது. பொதுவுடைமை அரசியலும் குறைபாடுடையது என்று நிறுவ விரும்புவதன்வழியாகத் தன்னை அம்பேத்கரிய எழுத்தின் ஒருபகுதியாக இந்நாவல் மாற்றிக்கொண்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**


- ❖ அம்பேத்கர் பி. ஆர்., பூ. கொ. சரவணன்(மொ.பெ.), விசாவுக்காக காத்திருக்கிறேன், நீலம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2024.
- ❖ அம்பேத்கர் பி. ஆர்., ப்ரேமா ரேவதி (மொ. பெ.), சாதியை அழித்தொழித்தல், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், ஏழாம் பதிப்பு – 2021.
- ❖ அம்பேத்கர் பி. ஆர்., இந்தியாவில் சாதிகள் அவற்றின் அமைப்பியக்கம், தோற்றம், வளர்ச்சி, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, இரண்டாம் பதிப்பு – 2015.
- ❖ கொற்றவை, சாதியப் பிரச்சனையும் மார்க்சியமும் தொடரும் விவாதம், மார்க்ஸ் பதிப்பகம், சென்னை, 2023.
- ❖ சம்பத். பி., சாதி வர்க்கம் விடுதலை, பாரதி புத்தகாலயம், சென்னை, 2022.
- ❖ தமிழ்ப்பிரபா, கோசலை, நீலம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, மூன்றாம் பதிப்பு 2023.